செ. கு. எண்: 100 நாள் :02.06.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.6.2014

22.2.2014 அன்று திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர், தாழாங்குப்பம் பகுதியைச் சேர்ந்த திரு. ராஜி என்பவரின் மகன் மீனவர் முத்து;

9.3.2014 அன்று ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தென்கடல் பகுதியைச் சேர்ந்த திரு. பஞ்சவர்ணம் என்பவரின் மகன் மீனவர் செல்வம்;

23.3.2014 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சூரியமூர்த்தி என்பவரின் மகன் மீனவர் சேகர்;

7.4.2014 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வானகிரி பகுதியைச் சேர்ந்த மீனவர் நடுகாட்டான்;

-- ஆகியோர் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது தவறி கடலில் விழுந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

27.4.2014 அன்று இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், புதுப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஆரோக்கியசெல்வம் என்பவர் புதுப்பட்டினம் கடற்கரை அருகே திரு. அபுபக்கர் என்பவர் தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**